05.02.2026.

எம்.சி.10/2024

எ.ம.சா.1 சங்கர் த/பெ. கன்னி

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

நானும் எனது மனைவியும் எந்த ஆண்டு முதல் பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் 1994ம் வருடம் ஆகும். எனது இரண்டு மகன்களுக்கும் திருமணம் ஆகிவிட்டதா என்றால் திருமணம் ஆகிவிட்டது. நான் எனது மனைவியை பிரிந்து வாழ்ந்து வருவது முதல் எந்தவொரு பொருள் மற்றும் பணம் உதவியும் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் எனது மகன்களுக்கு உதவி செய்துள்ளேன். எனது மகனுக்கு என்ன உதவி செய்தேன் என்றால் எனது மகன்களின் திருமண செலவுகளை நான்தான் செய்தேன். அந்த செலவிற்குரிய ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் திருமண மண்டப ரசீது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எவ்வளவு ரூபாய் செலவு செய்தேன் என்றால் இரண்டு திருமணத்திற்கும் சேர்த்து ரூபாய் 4/- லட்சம் வரை செலவு செய்தேன். மனுதாரர் என்னை பிரிந்தது முதல் கூலி வேலை செய்து பிழைத்து வருகிறார் என்றால் சரிதான். மனுதாரர் குடியிருந்து வந்த சோரபுத்தூரில் உள்ள குடிசை வீடு தீ பற்றி எரிந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும் நான் அங்குதான் இருந்தேன் நான்தான் தீயணைப்பு துறைக்கு தகவல் கொடுத்தேன் மனுதாரர் அப்போது அங்கு இல்லை. மனுதாரர் தற்போது எங்கு வசித்து வருகிறார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு தெரிந்தவரை மனுதாரர் எந்தவொரு வேலைக்கும் செல்கிறாரா என்றால் எனக்கு தெரியாது. நான் ஓய்வு ஊதியமாக மாதம் ரூ.47,000/-ம் பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. மாதம ் ரூ.32,000/-ம் பெற்று வருகிறேன். நான் பெற்று வரும் ஓய்வு ஊதியத்திற்கான வங்கி விவரங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரருக்கு சர்க்கரை மற்றும் இருதய நோய் பிரச்சனை இருந்து வருகிறது என்பது பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பொதுவாக சர்க்கரை மற்றும் இருதய நோய் பிரச்சனை இருந்தால் அதற்கு மாதம் எவ்வளவு ரூபாய் மருந்து செலவாகும் என்றால் ரூ.4000/- முதல் ரூ.5000/- செலவாகும். திருமணத்திற்கு பிறகு மனுதாரர் என்னிடம் அடிக்கடி தகராறு செய்து வந்ததாக எனது எதிர்மனுவுரையில் கூறியுள்ளதற்கு ஆதரவாக புகார் ஏதும் கொடுத்திருந்தேனா என்றால் மனுதாரர் எனது அக்கா மகள் என்பதால் நான் கொடுக்கவில்லை. மேலும் மனுதாரருக்கு சிவா என்ற நபருடன் தொடர்பு இருப்பதாக கூறியுள்ளது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை அது சம்மந்தமாக ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

நான் ஓய்வு பெறும்போது ஓய்வுக்கால பணப்பலனாக ரூ.30/- லட்சம் மட்டுமே பெற்றேன் என்பதற்கான ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் 2வது திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்பதற்காக மனுதாரரை புறக்கணித்து விட்டேன் என்பதால் மனுதாரரை பராமரிக்க ஜீவனாம்சம் கொடுக்க கடமைபட்டவன் என்றால் சரியல்ல, மனுதாரருக்கு சொந்தமான வீடு மற்றும் நிலம் உள்ளது. அதற்குரிய ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல.

மனுதாரர் பெயரில் உள்ள நிலத்தற்கான சர்வே எண் மற்றும் விஸ்தீரனம் தெரியுமா என்றால் தெரியாது. நான் ஓய்வு ஊதிய பணப்பலனாக ரூ.70/. லட்சமும், ஓய்வு ஊதியமாக மாதம்ரூ.47/- ஆயிரம் பெற்றுவருகிறேன் என்றாலும் அதனை மறைப்பதற்காகதான் எனது தரப்பு சொத்து விவர வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால ் சரியல்ல. நான ் மனுதாரரை சட்டப்படி பராமரிக்க கடமைபட்டதால் ஜீவனாம்சம் கொடுக்க கடமைபட்டவன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.